FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS (Under Section [redacted] B.N.S.S.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213025

1. District : Theni District — PS: VAC, Theni — Year: 2026 — FIR No.: 01/2026 — Date: 09/6/2
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — மு.த.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988, as amended by PC (amendment) Act, 2018 — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 08.6.26 — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை
   Time Period : மதியம் சுமார் — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   நேர அளவு 12 மணி).
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.6.2026 — Time : நேரம் 17.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.06.2026 — Time : நேரம் 18.00hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed Petition.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 45kms South West.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address முகவரி o/o Village Administrative Officer, Cumbum Village, Uthamapalayam Taluk, Theni District
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : மாவட்டம்
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.kanagaraj — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Suruliyappan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 62yrs — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Farmer — (g) Address : முகவரி No144, North Street, Chinna Ovalapuram, Uthamapalayam Taluk, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Karthi, Village Administrative Officer (VAO) Cumbum Village, Uthamapalayam Taluk, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Computer typed separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. தினகரன் 9/6/2026

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

T.R.C. 09.06.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.6.2026

Name பெயர் T. RAMESWARI

Rank: நிலை .....No. எண் .....

Inspector of Police, V & AC, Theni.

12. F.I.R. contents (Attach separate sheet if required) :

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் : (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி , ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2026-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது : தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 09.06.2026-ம் தேதி 17.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சின்ன ஓவுலாபுரம், 144, வடக்கு தெருவை சேர்ந்த சுருளியப்பன் மகன் S. கனகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி பெறுநர்-காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தேனி மாவட்டம் என முகவரியிட்ட என்னிடம் கொடுத்த கணினி தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு : நான் சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். உள்ளூர் பெருமாள் கோவில் பூசாரியாக இருக்கிறேன். விவசாயமும் செய்து வருகிறேன். எனது மனைவி செல்வமணியின் தங்கை லோகமணி, க/பெ.ரவீந்திரன் ஆவார். இவர் சென்னை காஞ்சிபுரம் மாவட்டம் 5/59, பத்மாவதி நகர், 4வது குறுக்கு தெரு, புதுக்கோவில் அருகில், மாடம்பாக்கத்தில் வசித்து வருகிறார். இவர் தனியார் பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்கிறார். 2022ம் வருடம் கம்பம் கிராமத்தில் சர்வே நம்பர் 986/2, 986/2A, 653/2, 653/2A1-ல் இடத்தில் 8 செண்ட் புஞ்சை நிலம் மட்டும் கூடலூர் சடமாயன் மகன் லோகநாதன் என்பவரிடமிருந்து லோகமணி அவர்கள் கிரயத்திற்கு பெற்று இன்றுவரை அவர் அனுபவத்தில் உள்ளது. பள்ளி கோடை விடுமுறைக்கு எங்கள் வீட்டிற்கு வந்திருந்த லோகமணி, ரவீந்திரன் மேற்சொன்ன லோகமணிக்கு சொந்தமான 8 செண்ட் புஞ்சை நிலத்திற்கு பட்டா பெற விண்ணப்பித்து அதன்படி கடந்த 02.06.2026ல் பட்டா எண் 32742ன்படி பட்டா பெறப்பட்டது. பட்டாவில் லோகமணி என்ற பெயருக்கு

பதிலாக லோகராணி எனவும் மொத்த இட பரப்பளவு 8 செண்ட் என்பதற்கு பதிலாக 7.9 (0.3.20 ஏர்ஸ்) செண்ட் எனவும் தவறுதலாக குறிப்பிட்டு இருந்தது. இந்த விவரத்தை லோகமணி, ரவீந்திரன் விடுமுறை முடிந்து சென்னை சென்றுவிட்டதால் போனில் தெரிவித்தார்கள். லோகமணி மற்றும் ரவீந்திரன் என்னிடம் தற்போது தாங்கள் சென்னையில் இருப்பதால் தங்களால் பட்டா மாற்றம் தொடர்பான வேலைகளை கவனிக்க இயலாது என்றும், லோகமணி சார்பாக என்னை பட்டா பெயர் மாற்றம் தொடர்பான அனைத்து வேலைகளையும் அவர் சொல்லும்படி அரசு அலுவலர்களை நேரில் சென்று பார்த்து பட்டா பெயர் மாற்றம் செய்து வாங்குமாறும் லோகமணி போனிற்கு வரும் அரசாங்க குறுஞ்செய்தி, மற்ற தகவல்களை எனக்கு தெரிவிப்பதாகவும் என்னிடம் போனில் சொன்னார். அதன்படி நானும், மன்மதனும் 02.06.2026ம் தேதி கம்பம் சென்று சர்வேயர் சிங்காரவேலன் என்பவரை ரவீந்திரன் சொன்னபடி நேரில் சென்று கேட்டோம். சர்வேயர் எங்களை விசாரித்துவிட்டு அவர் தெரிவித்தபடி நான் 02.06.2026ம் தேதியில் கம்பம் தனியார் ரோஜா இ-சேவை மையத்தில் இருந்து லோகமணி பெயருக்கு முழுபட்டா பெயர் மாற்றி வழங்க லோகமணி தொடர்பு எண்-9941835578 என்று குறிப்பிட்டு எனது உறவினர் மன்மதன் உடன் சென்று அனைத்து ஆவணங்களை கொடுத்து ஆன்லைன் அப்ளிகேசன் செய்தேன். தனியார் இ-சேவை மையத்தில் லோகமணியின் பட்டா டிரான்ஸ்பர் **Can number**-ல் பெயரில் லோகமணி என்பதற்கு பதிலாக தவறுதலாக லோகராணி என்று ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட காரணத்தினால் தான் இவ்வாறு பட்டாவில் தவறுதலாக பெயர் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு ரவீந்திரன் தெரிவித்தபடி நானும், மன்மதனும் 04.06.2026ம் தேதி மாலை சுமார் 3 மணிக்கு கம்பம் விஏஒ அலுவலகம் காந்திசிலை அருகில் உள்ள ஆபிஸிற்கு போனோம். அங்கு விஏஒ இல்லை. ஆபிஸில் இருந்த பெண் அலுவலர் பிறகு வாருங்கள் என்றார். நாங்கள் திரும்பி வந்துவிட்டு அதனைத் தொடர்ந்து மீண்டும் ரவீந்திரன் கேட்டுக்கொண்டபடி 08.06.2026ம் தேதி மதியம் சுமார் 12 மணிக்கு கம்பம் விஏஒ ஆபிஸிற்கு போனோம். அங்கு சில மனு கொடுக்க வந்தவர்கள்

காத்திருந்தார்கள். நாங்கள் சிறிதுநேரம் காத்திருந்து விட்டு விஏஓ-வை நேரில் பார்த்து லோகமணி முழுபட்டா பெயர் மாற்றம் குறித்து கேட்டேன். அவர் தனது டேபிள் மீது இருந்த லோகமணி பட்டா மாற்றம் குறித்த ஆவணங்களை எடுத்து பார்த்தார். அதில் நான் விண்ணப்பித்திருந்த லோகமணியின் பட்டா மாற்றம் குறித்த விண்ணப்பம், ஆதார் கார்டு நகல், பட்டா எண்.32472 நகல், கிரய ஆவணம் 5558/22-ன் நகல், வில்லங்கச்சான்று ஆகியவை இருந்தது. அதை எடுத்து பார்த்துவிட்டு விஏஓ தன்னிடம் இதுபோல் 6 மனுக்கள் நிலுவையில் இருப்பதாகவும், இதுகுறித்து சர்வேயர் தன்னிடம் பேசிவிட்டதாகவும், உங்களுக்கு பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.5000/- செலவாகும் என்று சொன்னார். பட்டா கொடுக்க ரூ.5000/- மா என நான் கேட்டதற்கு பணம் இல்லாமல் வேலை முடியாது. நான் கேட்ட பணம் கொடுத்தால் எல்லா ஆபிஸ் செலவையும் நானே பார்த்து மேல் அதிகாரிகளிடம் சொல்லி வேலையை முடித்து நானே சரியான பெயரில் உங்களுக்கு பட்டா வாங்கி கொடுத்துவிடுவேன் என்றும் சொன்னார். நான் விவசாயி என்னிடம் செலவுக்கே பணம் இல்லை, உறவினர் ரவீந்திரன் அனுப்பினால்தான் பணம் கிடைக்கும், சற்று குறைத்துக்கொள்ளுங்கள் என்றேன். நான் நீங்கள் கேட்ட பணம் கொடுத்தால் சரியான பெயர் மாற்றம் மற்றும் சரியான நில அளவு புதுப் பட்டாவில் மாற்றித்தருவீர்களா? என்று கேட்டதற்கு பெயர் மாற்றம் மட்டுமே தான் சரி செய்து தருவதாகவும், நில அளவு மாற்றம் குறித்து சர்வேயரிடம் கேட்டுக்கொள்ளுமாறும் அதை தான் மாற்ற முடியாது என்றும் சொன்னார். லோகமணி மாலையில் தான் வேலை முடித்து வருவார், அவரை தற்போது தொடர்பு கொள்ளமுடியாது என்றேன். விஏஓ நான் பட்டா பெயர் மாற்றம் செய்யும் வேலைக்கு இன்றே ஏற்பாடு செய்கிறேன் என்றும் என்னிடம் ரூ.5000/- கொடுத்தால் தான் மேல் அதிகாரிகள் பட்டா தருவார்கள், அதனால் சீக்கிரம் ரூ.5000/- பணம் ஏற்பாடு செய்து விட்டு வாங்க என்றார். மேலும் முருகேஸ்வரி என்று அலுவலகத்தில் இருந்த பெண் அலுவலரை அழைத்து உங்க நம்பரை இவங்களிடம் கொடுங்க என்று சொல்லியும் என்னிடம் பெண் அலுவலரை காட்டி அவங்ககிட்ட

கேட்டுக்கோங்க என்று சொன்னார். அதன்படி அந்த பெண் அலுவலர் ஒரு பேப்பரை கிழித்து K.முருகேஸ்வரி, 7539919167 என்று எழுதி என்னிடம் கொடுத்தார். நாங்கள் ரவீந்தரனிடம் பேசிவிட்டு சொல்கிறோம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம். அந்த கம்பம் கிராம விஏஓ பெயரை விசாரித்ததில் கார்த்தி என்று தெரிந்துகொண்டோம். பின்னர் நான் லோகமணி, ரவீந்திரனிடம் போனில் பேசி விவரம் தெரிவித்தேன். அவர்களிடம் நான் அரசாங்க வேலையை செய்துதர லஞ்சம் கேட்கும் விஏஓ-க்கு ரூ.5000/- லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை எனவும், லஞ்ச ஒழிப்பு பிரிவில் புகார் கொடுக்கலாமா என்று கேட்டேன். அதற்கு லோகமணி, ரவீந்திரன் தாங்கள் சென்னையில் இருப்பதால் அவர் சார்பாக என்னை கம்பம் விஏஓ மீது பட்டா பெயர்மாற்றம் செய்ய ரூ.5000/- என்னிடம் லஞ்சம் கேட்பது தொடர்பாக என்னை லஞ்ச ஒழிப்பு பிரிவில் புகார் கொடுக்குமாறும் தெரிவித்தார். அவர் பின்னர் ரூ.5000/- எனக்கு பணம் போட்டுவிடுவதாகவும் சொன்னார். அதன்படி நான் கம்பம் விஏஓ திரு.கார்த்தி லஞ்சமாக கேட்ட பணம் ரூ. 5,000/-ஏற்பாடு செய்து பெற்று கொண்டுவந்துள்ளேன். இன்று 09.06.2026 தேதி மாலை தேனி லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து என்னிடம் ரூ.5000/- லஞ்சமாக கேட்ட கம்பம் விஏஓ கார்த்தி என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு இப்புகார் மனு மூலம் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, Sd/xxxxxxx (S. கனகராஜ் 9/6/2026). **இணைப்பு:** 1. லோகமணியின் பட்டா மாற்றம் குறித்த விண்ணப்பம்,2. ஆதார் கார்டு நகல்,3. பட்டா எண்.32472 நகல்,4. கிரய ஆவணம் 5558/22-ன் நகல், 5. வில்லங்கச்சான்று, 6. முருகேஸ்வரி எழுதிக்கொடுத்த போன் நம்பர் எழுதிய சீட்டு.

Sir, Received this complaint on 09.06.2026 at 17.00 hrs. A confidential verification was conducted in respect of the complaint and the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission

from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti Corruption Cr.No. 01/2026, u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the P.C (amendment) Act, 2018 was registered on 09.06.2026 at 18.00 hrs.

The Original FIR along with the original complaint of Tr. S.Kanagaraj of Chinna ovulapuram with the attached 6 documents is sent to the Honorable Principle District and Sessions Judge Court, Theni District and copies are sent the officers concerned.

09.6.26

(T.Rameswari)
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Theni District.